வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,009,22,14,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,003,99,19,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27-4-2010) காலை செவ்வாய் கிழமை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

66. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டில் ஊராட்சிகளின் பணி குறித்த ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 166 ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

67. 2008-2009 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (தமிழ்நாடு) ஆண்டறிக்கை. [2005 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 42/2005) 12(3)(f) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

[2010 ஏப்ரல் 26

68. 2009-2010 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (தமிழ்நாடு) ஆண்டறிக்கை. [2005 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 42/2005) 12(3)(f) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ்)

69. 2008-2009 ஆம் ஆண்டிற்கான அடையாறு பூங்காவின் முதலாம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

80. 2009-2010 ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

81. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் நான்கு ஆண்டு சாதனைகள் (2006-2007 முதல் 2009-2010 வரை) குறித்த புத்தகம்.

82. ஊரக வளர்ச்சியில் வியத்தகு மாற்றம் - நான்கு ஆண்டு சாதனைகள் (2006-2007 முதல் 2009-2010 வரை) என்கிற புத்தகம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS